# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் (மீள்) பரீட்சை – ஆண்டு I, 2019

## இலங்கையின் சட்ட முறைமை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

வினாத்தாளின் பக்கங்களின் எண்ணிக்கை: 04

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. சமன் என்பவன் ABC கம்பனியின் பிரதம கணக்காளராக இருந்தான். அவனது பன்னிரெண்டாவது வயதில் தனது தந்தையை இழந்ததிலிருந்து தன் தாயாருடன் மிக நெருக்கமான பிணைப்பினை அவன் கொண்டிருந்தான். ருவான் என்பவன் மோட்டார் வாகனமொன்றினைக் கவனயீனமானச் செலுத்தியதன் விளைவாக, விபத்தொன்று ஏற்பட்டதுடன் 2020ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியன்று சமன் இறந்தான். சமன் இறக்கும் போது 22 வயதுடையவனாக இருந்ததுடன் அவனுக்குத் திருமணமாகியுமிருக்கவில்லை. தனது ஒரே பிள்ளையின் இறப்பின் விளைவினால் தனக்கு ஏற்பட்ட பொருளாதார ஆதரவு இழப்பிற்கான சேதத்தினைக் கோருவதற்கு குடியியல் வழக்கொன்றினை ருவானிற்கு எதிராக தாக்கல் செய்ய சமனின் தாய் விரும்புகின்றார். தனது அன்பிற்குரிய மகனின் பாசம், கவனிப்பு மற்றும் உடனிருப்பு என்பவற்றின் இழப்புக் காரணமாக நஷ்டஈட்டினைக் கோர சமனின் தாயார் விரும்புகின்றாள்.

    இலங்கையில் ரோமன்-டச்சுச் சட்டத்தின் நியதிச்சட்ட மாற்றத்தில் குறிப்பாக கவனஞ் செலுத்துவதன் மூலம், நாட்டில் நிலவுகின்ற சட்டத்திற்கமைய சமனின் தாயார் குறித்த சேதங்களினைக்கோரிப் பெறுவதற்கு உரித்துடையவரா என ஆராய்க. உமது விடையானது பொருத்தமான நியதிச்சட்ட மற்றும் தீர்ப்புச்சட்ட அதிகாரங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

    (25 புள்ளிகள்)

02. இலங்கையின் சட்டமுறைமையில் ஆங்கிலச்சட்ட வருகையில் நீதித்துறையின் வகிபங்கினது முக்கியத்துவத்தினை ஆராய்க. உமது ஆராய்வானது பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

    (25 புள்ளிகள்)

03. அப்புகாமி, பொடிகாமி மற்றும் மெனிக்கா ஆகிய மூன்று தனது பிள்ளைகளை விட்டு ஹொரந்தகாமி என்ற கண்டியரான தந்தை இறந்தான். கிரிகாமி என்பவனை பொடிகாமியும் ஹெதுஹாமி என்பவனை மெனிக்காவும் திருமணஞ் செய்தனர். இருவரது கணவன்மார்களும் காலியைச்சேர்ந்தவர்களாவர். அவர்களது தந்தை இறந்ததன் பின்னர் தமது பரம்பரை வீட்டிலிருந்து பொடிகாமியும் மெனிக்காவும் வெளியேறினார்கள். தமது பரம்பரை வீட்டுக்குள் நுழைவதற்கு அவர்கள் இப்போது அப்புகாமியினால் தடுக்கப்படுகின்றார்கள். தனது சகோதரிகளின் திருமணமானது 'தீக' முறைமையிலான திருமணமெனவும், அதனால் தமது தந்தையின் ஆதனங்கள் மீது உரிமைகளை அவர்கள் கொண்டிருக்கமாட்டார்கள் எனவும் அவன் வாதிடுகின்றான். கண்டிய சொத்துறுதியற்ற வழியுரிமைச் சட்டத்தின்கீழ் ஹொரந்தகாமியின் இரு மகள்மாரினதும் உரிமைகளை விளக்குக.

(25 புள்ளிகள்)

04. **(அ)** மற்றும் **(ஆ)** **<u>இரண்டுக்கும்</u>** விடையளிக்குக.

அ) "இனங்கள் மற்றும் சமயங்கள் பலவற்றையும் திருமணக் கட்டளைச்சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்கள் பலவற்றையும் கொண்டுள்ள இலங்கை போன்றதொரு நாட்டில், தமது மதத்தினையும் ஆள்சார் சட்டத்தையும் மாற்றிக் கொள்கின்றதும் வலிதான பலதார திருமணமொன்றினை நிறைவேற்றிக் கொள்வதற்குமான உள்ளார்ந்த உரிமையை நிரந்தர வாழ்விடமாகக் கொண்டுள்ள உள்ளூர்வாசிகள் கொண்டுள்ளனர். அத்தகைய உரிமையானது மறுக்கப்படின் அது நியதிச்சட்டத்தின் ஊடாக நடைபெறவேண்டும்"

*Lord Upjohn in the Attorney General v. Reid, (1964) 67 NLR 25 at p.25*

முஸ்லீம் சட்டப் பிரயோகத்தினைத் தொடர்புபடுத்தி இலங்கையின் தற்கால சட்ட நிலமையை சரியான முறையில் இந்த நீதித்துறைக் கண்ணோட்டம் பிரதிபலிக்கின்றதா என்பதனை ஆராய்க.
பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(15 புள்ளிகள்)

ஆ) அப்துல் என்பவன் றஹீம் மற்றும் சுகானாவின் மகவேற்புச்செய்யப்பட்ட மகனாவான். அவனது ஆதனங்கள் அனைத்தையும் அப்துலுக்கு வழங்குவதற்கு றஹீம் விரும்புகின்றான். ராஸிக் என்பவன் றஹீமினுடைய மூத்த சகோதரனாவான். 1941ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க சிறுவர் மகவேற்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அப்துல் மகவேற்பு செய்யப்பட்டிருப்பதனால் சொத்துறுதியற்ற வழியுரிமைச் சட்டத்தின்

கீழும் கூட றஹீமுடைய ஆதனங்களிற்கு அப்துல் வாரிசாக வருவானென ராஸிக் தெரிவித்தான்.'

ராஸிக்கினுடைய அபிப்பிராயத்துடன் நீர் உடன்படுகிறீரா? பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களின் பின்னணியில் உமது விடையினை ஆதாரப்படுத்துக.
~~குறித்த தரப்பினர் முஸ்லிம் சட்டத்தினால் ஆளப்படுவோர்களாயின் ராஸிக்கால் வழங்கப்பட்ட சட்ட ஆலோசனையின் துல்லியம் தொடர்பில் கருத்துரைக்குக.~~

(10 புள்ளிகள்)

05. சூரியா என்பவன் 1990ம் ஆண்டு யாழ்பாணத்தில் பிறந்தான். தலைமுறையாக அங்கு வாழ்ந்துவந்த அவனது பெற்றோர் குறித்த கிராமத்தில் பெறுமதியான வீடொன்றையும் விவசாய நிலங்களையும் சொந்தமாகக் கொண்டிருந்தனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சூரியா கல்விகற்கும் போது ராதிகா என்பவளைச் சந்தித்தான். அவர்கள் காதல் வயப்பட்டதுடன் திருமணம் செய்து கொள்ளவும் தீர்மானித்தனர். ராதிகா கொழும்பிலுள்ள செல்வந்த வியாபாரக் குடும்பமொன்றின் ஒரே மகளாவாள். சூரியா திருமணத்தின் பின்னர் கொழும்பில் வசிக்க விரும்புவதுடன் வெள்ளவத்தையில் அமைந்துள்ள ராதிகாவின் தந்தையின் வியாபார ஸ்தாபனத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் ~~பணிபுரிகின்றான்.~~ பணி புரிய விரும்புகின்றான்

திருமணத்தின் பின்னர் அவன் கொழும்பில் வசித்துவருவதனால் அவனுக்கு ஏற்புடையதான தனியார் சட்டமானது மாற்றப்படுமா என்பதனை சூரியா அறிந்து கொள்ள விரும்புகின்றான். சூரியாவுடனான அவளது திருமணத்தின் காரணமாக அவள் மீது சட்ட விளைவு எதாவது உள்ளதா என்பதனை அறிந்து கொள்ள ராதிகா விரும்புகின்றாள்.

சூரியா மற்றும் ராதிகாவிற்கு ஏற்புடையதாகும் சட்டத்தினை விளக்குக. உமது விடையானது பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

06. நீதிமன்றங்களின் வினைத்திறன் என்பது கட்டமைப்பு, அணுகிபெறுகின்றமை, தீர்ப்புக்களின் தரம் மற்றும் வழக்காடுபவர்களுக்கான சமத்துவம் என்பவற்றினை உள்ளடக்கிய நீதிமன்றத்தின் செயற்பாட்டின் பல பரிணாமங்களைக் குறிக்கலாம். இலங்கையின் தற்போதைய நீதிமன்ற முறையின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

07. "பன்மைத்துவம் என்பது பெரும்பான்மை சமூகத்துடன் சிறுபான்மை குழுக்களினது இனங்களுக்கிடையிலான உறவினது பெறுபேறுகளில் ஒன்றேயாகும் என்பதுடன், அது பல்வேறு இனக்குழுக்கள் தமது தனித்துவமான கலாசாரம் மற்றும் பழக்கவழக்கத்தினை பாதுகாக்கும் அதேவேளையில், பொதுவான இன விழுமியங்களையும் குறிக்கோள்களையும் இன்னமும் பகிர்ந்து கொள்வது பற்றியதாகும்."

- Gordon,Milton, *Assimilation in American Life* (Oxford University Press, 1964, Pp 71-73)

இலங்கையின் பன்மைத்துவச் சட்டத்தின் சாதக பாதகங்களின் பின்னணியில் மேலுள்ள கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

***************************